தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10429/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** — **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** — திரு M. கார்த்திகேயன்
மேனேஜர், டாஸ்மாக்,
திருவண்ணாமலை .

**பொது அதிகார அமைப்பு:** — பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை .

மனுதாரர் திரு M. கார்த்திகேயனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம் திருவண்ணாமலை அவர்களும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 27.1..09 அன்று ஒரு சில கோப்புகள் பதிவறையில் ஒப்படைக்கப்பட்டது குறித்தும் கோப்புகளை அழிக்கும் பதிவேடு நகல் கேட்டும் மனு செய்துள்ளார். 13.2.09 அன்று அலுவலகத்தில் பதிவேடுகள் கிடைக்கவில்லை என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 18.2.09 அன்று மேல் முறையீடு செய்துள்ளார். 9.3.09 அன்று தகவல் வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2.5.09 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் பதிவறையில் ஒப்பபடைக்கப்பட்ட கோப்புகள் குறித்த தகவல் தரப்படவில்லை என்றும், கோப்புகளை அழிக்கும் பதிவேடு நகல் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்டக் கோப்புகள் கிடைக்காததால் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். 21.5.09 அன்று வேறு ஒரு மனுவில் கோப்புகளைப் பார்வையிட்ட போது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரரால் பார்வையிடப்பட்டதாகவும், அதனுடைய குறிப்புகள் இருப்பதாகவும் தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்கள் அவ்வலுவலகத்தில் இருந்தும் வழங்கப்படவில்லை என்று இவ்வாணயம் கருதி கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் கேட்ட உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட 10 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது,

மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்கள் அவ்வலுவலகத்தில் இருந்தும் இது வரை தகவல் வழங்கப்படாதற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**உதவிப் பதிவாளர்**

மாவட்ட ஆட்சியர்,

திருவண்ணாமலை

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை .

திரு M. கார்த்திகேயன்

மேனேஜர், டாஸ்மாக்,
திருவண்ணாமலை .